KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# காட்சிக் கலைக்கல்வி

# PENDIDIKAN SENI VISUAL

ஆண்டு

TAHUN

5

## SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

## தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி


**Penulis** / **ஆசிரியர்கள்**

OTHAYA KUMARAN KANDASAMY BCK., PJK / உதயகுமாரன் கந்தசாமி BCK, PJK

ASIHWINIY FRANCISCO / அஷ்வினி பிரான்சிஸ்கோ

**Editor** / **பதிப்பாசிரியர்கள்**

PONLETCHUMY A/P ARUMUGAM / பொன்லெட்சுமி ஆறுமுகம்

KUMARAN A/L RAMAYAH / குமரன் இராமையா

**Pereka Bentuk** / **வடிவமைப்பாளர்**

PRABU PALANI / பிரபு பழனி

**Ilustrator** / **ஓவியர்கள்**

ARMIZAN BIN YUNOS / அர்மிசான் பின் யூனூஸ்

AZRUL HELMI BIN ABD. WAHAB / அஸ்ருல் ஹெல்மி பின் அப்துல் வஹாப்





Multi Educational Book Enterprise

2020

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

No Siri Buku: 0042

KPM2020 ISBN 978-967-2046-48-6

Cetakan Pertama 2020

© **Kementerian Pendidikan Malaysia**

Hak Cipta Terpelihara. Mana-mana bahan dalam buku ini tidak dibenarkan diterbitkan semula, disimpan dalam cara yang boleh dipergunakan lagi, ataupun dipindahkan dalam sebarang bentuk atau cara, baik dengan cara bahan elektronik, mekanik, penggambaran semula mahupun dengan cara perakaman tanpa kebenaran terlebih dahulu daripada Ketua Pengarah Pelajaran Malaysia, Kementerian Pendidikan Malaysia. Perundingan tertakluk kepada perkiraan royalti atau honorarium.

**Diterbitkan untuk**
**Kementerian Pendidikan Malaysia oleh:**

**Multi Educational Book Enterprise**
No. 22A-2, Jalan PJS 8/4,
Dataran Mentari, Bandar Sunway,
46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel: 03-5636 2568
Faks: 03-5636 0825
Laman Web: http://www.multiedu.com.my

**Reka Letak dan Atur Huruf:**

**Multi Educational Book Enterprise**

Muka Taip Teks: Dhanyeta
Saiz Muka Taip Teks:14 poin

**Dicetak oleh:**

**Aslita Sdn. Bhd. (146102-U)**
No. 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel:03-61867645
Faks:03-61867635

# PENGHARGAAN

Penerbitan buku teks ini melibatkan kerjasama banyak pihak. Sekalung penghargaan dan terima kasih ditujukan kepada semua pihak yang terlibat:

- Jawatankuasa Penambahbaikan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Pembetulan Pruf Muka Surat, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Penyemakan Naskhah Sedia Kamera, Bahagian Sumber dan Teknologi Pendidikan, Kementerian Pendidikan Malaysia.
- Pegawai-pegawai Bahagian Sumber dan Teknologi Pendidikan, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.
- Jawatankuasa Peningkatan Mutu Penerbit.
- Jabatan Kebudayaan dan Kesenian Negara.
- Pengarah, IPG Kampus Sultan Abdul Halim, Sungai Petani, Kedah.
- SJKT Ladang Ulu Bernam, Perak.

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| முன்னுரை | iv |
| பட உருக்களும் விளக்கங்களும் | vi |
| 21ஆம் நூற்றாண்டு கற்றல் நடவடிக்கைகள் | 1 |
| காட்சிக் கலைமொழி | 2 |
| உருவாக்குதலின் கோட்பாடுகள் | 4 |
| கலவை நுட்பத்தில் படவுருவாக்கம் | 6 |
| அலகு 1 உயர்ந்த கோபுரம் | 7 |
| அலகு 2 மலேசியாவை நேசிப்போம் | 13 |
| அலகு 3 வண்ணத்துளிகள் | 19 |
| அலகு 4 காகித மிதிவண்டி | 28 |
| அலகு 5 பொங்கல் பானை | 34 |
| முதலாம் பருவ இடுபணி | 41 |
| அலகு 6 எழில் ஓவியம் | 44 |
| அலகு 7 பாண்டா கரடி | 51 |
| அலகு 8 சேர்ப்பு ஒட்டுப்படமும் கோலங்களும் | 59 |
| அலகு 9 குட்டி யானை | 68 |
| அலகு 10 நூல் கலை | 76 |
| இரண்டாம் பருவ இடுபணி | 87 |
| கலைச் சொல் அகராதி - காட்சிக் கலைக் கல்வி | 90 |

# முன்னுரை

ஐந்தாம் ஆண்டிற்குரிய காட்சிக் கலை, தர ஆவண அடிப்படையில் காட்சிக் கலைக்கல்வி மலேசியக் கல்வி அமைச்சின் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவின் கீழ் காட்சிக் கலைக்கென தனி நிலையில் உருவாக்கப்பட்டது. கலை மொழிக்கு முதன்மைச் செலுத்தி, கலைத்திறன், புத்தாக்கத்திறன், கலையை மதித்துப் போற்றுதல், கலை விளையாட்டு, காட்சிக் கலைத்திட்ட இடுபணி போன்ற உள்ளடக்கத்தோடு இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

காட்சிக் கலைக்கல்வி கற்பித்தல் முறையில் கலைமொழி ஒரு முக்கியக் கூறாக அமைகிறது. கலைக்கல்வி நடவடிக்கையைப் படைப்பதற்கும், கலைப்படைப்பினை உருவாக்குவதற்கும் கலைமொழி அறிதல் புலமை அவசியமாகிறது. அதனைக் கருத்திற்கொண்டு இந்நூலில் முதல் அலகினைத் தொடங்குவதற்கு முன்பு, கலைமொழி குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பட உருவாக்கமும் கோலங்களை உருவமைத்தலும் உருவாக்குதலும் உருவமைத்தலும் கட்டுதலும் பாரம்பரிய கைவினைத் திறனை அறிதல் போன்ற துறைகளில் காட்சிக் கலைக்கல்வியை ஆண்டு ஒன்று முதல் நான்கு வரை தனி நிலையில் இதுவரை நாம் மேற்கொண்டு வந்தோம். இந்த ஐந்தாம் ஆண்டு பாட உள்ளடக்கத்தில் பட உருவாக்கத் துறையில் ஒருங்கிணைந்த நிலையில் நடவடிக்கையை நாம் மேற்கொள்ளவிருக்கின்றோம். சேர்ப்பு ஒட்டுப்படம், சுவரொட்டி, துண்டு ஒட்டுப்படம், புனையா ஓவியம் ஆகியவற்றோடு முறையே கீறல், மொந்தாஜ், ஓவியம், பதித்தல் ஆகிய நுட்பங்கள் ஒருங்கிணைந்த நிலையில் மாணவர்கள் கலை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

காட்சிக் கலைக்கல்வி 10 அலகுகளாக இதில் தொகுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் 1 முதல் 5 வரையிலான அலகினை முதல் பருவத்திலும் 6 முதல் 10 வரையிலான அலகினை இரண்டாம் பருவத்திலும் கற்றல் கற்பித்தலுக்கான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம். பாட அறிமுகம், காட்சிக் கலைமொழி, கருவி, உபகரணம், தொடர் நடவடிக்கை, செய்முறைப் பயிற்சி என முறையாக இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் ஆர்வத்தையும் கலைத்துறையில் அவர்களின் ஈடுபாட்டினையும் மேம்படுத்தும் நோக்கில் சில கலை நடவடிக்கைகளுக்குச் செய்முறைப் பயிற்சி காணொலியாக உருவாக்கப்பட்டுள்ளன. இதனை AR குறியீட்டின்வழி கண்டு, கற்று மாணவர்கள் பயன் பெறலாம்.

இந்நூலில் 21ஆம் நூற்றாண்டு திறன் (Abad ke-21), உயர்நிலைச் சிந்தனைத் திறன் (KBAT), விரவிவரும் கூறுகள் (EMK), சிந்தனைக் குறிவரைவு (i- Think), தகவல் தொழில் நுட்பம், எதிர்காலவியல் ஆகிய கூறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதன் அடைவு நிலையினை மாணவர்கள் பெறும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திலும் இணைக்கப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் திறனைப் பயன்மிக்க முறையில் மேற்கொள்ள ஒவ்வொரு பக்கத்திலும் ஆசிரியர் குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் உற்று நோக்குத் திறன், சிந்தனையாற்றல், ஆய்வுச் சிந்தனை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்நூலினைத் துணையாகக் கொண்டு மாணவர்களின் தேவைகளையும் அவர்களின் ஆற்றல், திறனையும் அறிந்து அதனுடன் பல்வேறு பயன் தரும் நுட்பங்களைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை வளப்படுத்தலாம். காட்சிக் கலைக்கல்வி ஆசிரியர்கள் கலைக்கல்வி கற்றல் கற்பித்தல் நடவடிக்கையின் போது மாணவர்களால் படைக்கப்படும் கலைப்படைப்புகளை மதித்துப் போற்றுவர். ஆண்டு இறுதியில் காட்சிக் கலைக்கல்வி இடுபணியாக மேற்கொண்டு அவற்றைக் கொண்டு கண்காட்சி நடத்தலாம். காட்சிக்கலைக் கல்வி ஆசிரியர் மட்டுமல்லாது, பிற ஆசிரியர்களும் எளிய முறையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள இந்நூல் பெரிதும் துணைபுரியும் என்பது திண்ணம்.

இந்தப் பாடநூல் மிகச் சிறப்பாக உருப்பெற துணை நின்ற மலேசியக் கல்வி அமைச்சின் கல்விக் கருவூல தொழில்நுட்பப் பிரிவிற்கும் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவிற்கும் எல்லா நிலையிலும் உதவியும் ஆலோசனையும் வழங்கிய நல்ல உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காட்சிக் கலைக்கல்வி வழி கல்வித் திறனை வளர்ப்போம்.

நன்றி,
ஆசிரியர்கள்.

# பட உருக்களும் விளக்கமும்

அலகு

நடவடிக்கை

சிறு தலைப்பு

குறிப்பு

பாதுகாப்பு

செய்முறைப் பயிற்சி

ஆசிரியர் குறிப்பு

நிரலொழுங்கு வரைபடம்

நினைவில் கொள்க

உயர்நிலைச் சிந்தனை

ஜாப்பரைப் (ZAPPAR) பெற இங்கு நோக்குக

App Store

Google play

AR நோக்குக் குறியீடு

KPM



## 21ஆம் நூற்றாண்டு கற்றல் நடவடிக்கைகள்



### காட்சியக நடை (Gallery Walk)

1. தேடலுக்குப் பிறகு நடத்தப்படும் நடவடிக்கை
2. மாணவர்கள் தங்களின் படைப்புகளை ஆசிரியர் வழங்கும் கட்டளைக்கு ஏற்பக் குழு முறையில் படைத்தல்.
3. அனைத்துக் குழுக்களும் தங்களது படைப்புகளை முடித்த பின்னர் வகுப்பில் வெவ்வேறு திசை சுவர்களில் ஒட்டுதல்.
4. பிற மாணவர்கள் தத்தம் கருத்துகளை ஒட்டுத்தாளில் எழுதி ஒட்டுதல்.

### மூவர் கற்றல், ஒருவர் தங்கல் (Three Stray -On Stay)

1. ஒருவர் தனது படைப்புகளோடு ஒரே இடத்தில் அமர்தல்.
2. தகவல்களைக் கேட்டறிதல்.
3. இறுதியாகத் தங்கள் குழுக்களுக்குச் சென்று கலந்துரையாடுவர்.

### சிந்தி - இணை - பகிர் (Think- Pair-Share)

1. ஆசிரியர் தலைப்பைக் கொடுத்தல்.
2. குறிப்பிட்ட நேரத்திற்குள் மாணவர்கள் சிந்தித்தல்.
3. நேரம் முடிந்தவுடன் மாணவன் தன் இணையருடன் தன் ஏடலைப் பகிர்தல்; பிறகு வகுப்பில் பகிர்தல்.

### வல்லுநர் இருக்கை (Hot Seat)

1. தனியாளாகவோ குழுவிலோ ஆய்வு அல்லது வாசிப்பை மேற்கொண்ட பிறகு நடத்தப்படும் தொடர் நடவடிக்கையாகும்.
2. மாணவர்கள் வல்லுநர் இருக்கையில் அமர்தல்.
3. பிற மாணவர்கள் தொடுக்கும் கேள்விகளுக்கு வல்லுநர் பதிலளித்தல்.

### வட்ட மேசை (Round Table)

1. மாணவர்கள் குழுவில் அமர்தல்
2. ஆசிரியர் ஒரு தலைப்பைக் கொடுத்தல்.
3. ஒவ்வொரு மாணவரும் தத்தம் கருத்தை எழுத வேண்டும்.
4. அனைவரும் ஒரு பேனாவையும் தாளையும் பயன்படுத்த வேண்டும்.
5. முடிவுகளைப் படைக்க வேண்டும்.

### ஒரே நிலை - வேறு நிலை (Same - Different)

1. ஒருவர் இன்னொருவருடன் இணைந்து செய்யும் நடவடிக்கை
2. ஆசிரியர் கொடுத்த படங்களில் ஒரே நிலை, வேறு நிலை படங்களை அடையாளங்காணல்.
3. மாணவர்கள் வினா விடை அங்கத்திற்குப் பிறகு பதிலைச் சரிபார்ப்பர்.

KPM

# காட்சிக் கலைமொழி

காட்சிக் கலைமொழி கலைக்கூறுகளையும் உருவாக்குதலின் கோட்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

## கலைக்கூறு

### அ. கோடு

ஓர் ஓவியத்தின் அடிப்படைக் கூறு கோடுகளாகும். புள்ளிகளின் சேர்க்கையே கோடுகள். தொடர்புள்ளிகள் இணையும்போது கோடுகள் உருவாகின்றன.




### ஆ. வடிவம் (2D)

ஒரு கோட்டின் இறுதிமுனை தொடக்கக் கோட்டுடன் இணைந்தால் அதனை வடிவம் என்பர். கோடு, வண்ணம், தளத்தினைக் கொண்டு வடிவங்களை உருவாக்கலாம்.

### இ. உருவம் (3D)

கன அளவு கொண்டது உருவம். ஒன்றுக்கும் மேற்பட்ட தளம் கொண்டது 3D (முப்பரிமாண) வடிவம்.



**ஆசிரியர் குறிப்பு**

1.1

- காட்சிக் கலைமொழியில் கலைக் கூறுகளை அறிதல்.

**வி.வ.கூ:** மொழி / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

## ஈ. வண்ணம்

ஒரு படைப்பினை அழகூட்டுவதற்கு மட்டுமல்ல, அதனை மனங்கவரும் தன்மைக்கும், மன உணர்வு தொடர்புக்கும் வண்ணம் பெரிதும் பங்காற்றுகிறது.

**வண்ணச் சக்கரம்**




## உ. மேல்தள வடிவமைப்பு

ஒரு பொருளின் மேல் தளத்தில் இடம்பெற்றுள்ள வடிவங்களை மேல்தள வடிவமைப்பு என்பார்கள். அன்னாசிப்பழம், முள்நாறிப்பழம், காலணிஅடி, தரை வட்டயம் போன்றவற்றில் காணலாம்.



**மேல்தள வடிவமைப்பு**

## ஊ. இடைவெளி

ஒரே அளவுள்ள பொருள், தூரத்தில் இருந்தால் நமது பார்வைக்குச் சிறிதாகவும், அருகில் இருந்தால் பெரிதாகவும் இருக்கும். இந்த மாற்றத்திற்கு இடைவெளிதான் காரணம்.




**ஆசிரியர் குறிப்பு**

1.1 • காட்சிக் கலைமொழியில் கலைக் கூறுகளை அறிதல்.

**வி.வ.கூ:** மொழி / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

# உருவாக்குதலின் கோட்பாடுகள்

## அ. சமநிலை

சமநிலை என்பது கனம், ஈர்ப்பு, கவனிப்பு ஆகிய கூறுகள் ஒருங்கிணைந்த முறையிலும் சமசீர் / சமசீரற்ற நிலையிலும் இருப்பதாகும்.




I சமசீர் நிலையில் பட்டத்தின் அமைப்பு

2 கறுப்பு வெள்ளை எதிர்மறை வண்ணம்

3 ஒரே நிலைத்தன்மையில் சுபிட்சம் (Motif)

## ஆ. எதிர்மறை

ஒரு படைப்பில் முரண்பாடான கோட்பாடுகள் தென்பட்டால் எதிர்மறைக் கூறுகள் உருவாகும். மாறுபட்ட கலைகூறுகள், நுட்பம் மற்றும் வேறுபட்ட உபகரணங்களைப் பயன்படுத்துவதின்வழி எதிர்மறை கோட்பாட்டினை உருவாக்கலாம்.

## இ. ஒரே நிலைத்தன்மை

அமைதியான, அழகான, முறையான நிலையில், ஒரு தலைப்பின்கீழ் படைக்கப்படும் கலைகளில் ஒரேநிலைத்தன்மை தென்படும்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1

- காட்சிக் கலைமொழியில் நுட்பமுறையை அறிதல்.

**வி.வ.கூ:** மொழி / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

## ஈ. பல்வகை

பல்வகை என்பது படைப்பில் நிலை, ஏடல், பாணி, கலைக்கூறு போன்ற கூறுகளை இணைந்திருப்பதாகும்.

## உ . முதன்மைக்கூறு

ஒரு கலைப்படைப்பில் வித்தியாசமான, தனித்தன்மை வாய்ந்த கூறுகள் இருப்பின் அதனை முதன்மைக் கூறுகள் என்பர்.

1 பல்வகை

2 முதன்மைக்கூறு

3 சுபிட்சம்

4 அசைவும் நகர்ச்சியும்




## ஊ. சுபிட்சம் (Motif)

சுபிட்சம் என்றால் நேர்த்தியான சூழலினைக் குறிக்கும் கலை மொழியாகும். பல கூறுகளில் ஓவியப் படைப்பில் சுபிட்சத்தைப் படைக்கலாம். எதிர்மறையான சூழலில் சுபிட்சம் உருவாகாது.

## எ. அசைவும் நகர்ச்சியும்

கலைப்படைப்பில் நகர்வு, அசைவு, ஒளிவீச்சு ஆகியக்கூறுகளைக் காணலாம். அசைவும் நகர்ச்சியும் புகைப்படத்தில் மட்டுமல்ல ஓவியத்திலும் நாம் வெளிக் கொணர முடியும்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1

• படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அதனைப் படைப்போடு தொடர்புப்படுத்தி கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** மொழி / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

# கலவை நுட்பத்தில் படவுருவாக்கம்

படவுருவாக்கத்துறையில் ஓவியம், சித்திரம், சுவரொட்டி, துண்டு ஒட்டுப்படம், சேர்ப்பு ஒட்டுப்படம், பதித்தல், கீறல், அச்சடித்தல், தேய்த்தல், சொட்டுதல் கலை, அச்சு ஓவியம், அசையா உரு போன்ற பல்வேறு நிலைகளில் கலைப்படைப்பினை உருவாக்கலாம்.

ஐந்தாம் ஆண்டில் கலவை நுட்பத்தில் கலைப்படைப்பினை உருவாக்குவது பற்றி அறியவிருக்கின்றோம்.




1 மெழுகுக்கலை நுட்பம்

2 புனையா ஓவிய நுட்பம்

3 முடைதல் நுட்பம்

4 ஓவிய நுட்பம்

5 கீறல் நுட்பம்

6 சேர்ப்பு ஒட்டுப்பட நுட்பம்

7 துண்டு ஒட்டுப்பட நுட்பம்

8 பதித்தல் நுட்பம்

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1 • காட்சிக் கலைமொழியில் நுட்பமுறையை அறிதல்.

**வி.வ.கூ:** மொழி / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

## சேர்ப்பு ஒட்டுப்படம்

காகிதம், படம், குச்சி, தானியம், இலை, மணிகள், துண்டுத் துணி போன்றவற்றைச் சேகரித்து நமது கற்பனைக்கு ஏற்றாற்போன்று ஒரு தளத்தில் ஒன்றின் மேல் ஒன்று ஒட்டுவது சேர்ப்பு ஒட்டுப்படமாகும் (கோலாஜ்). இந்தப் படைப்பினைத் தொட்டுணர முடியும்.




வண்ணக் காகிதத்தை வடிவமாகக் கத்தரித்து உருவாக்கிய கோலாஜ் படைப்பு.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.1

- படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.

**வி.வ.கூ:** மொழி / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

## கீறல் கலை

மெழுகு போன்ற மென்மையான வண்ணத்தினை ஒரு தளத்தின் மேல் பூசிய பின் அத்தளத்தினைக் கூர்மையான பொருளைக் கொண்டு கீறுவதைக் கீறல் கலை என்பர். இந்நடவடிக்கையினை மேற்கொள்ளும்போது அழிப்பானைப் பயன்படுத்தக்கூடாது. கீறல் நடவடிக்கையை மிக நுட்பமான முறையில் பொறுமையாக மேற்கொள்ள வேண்டும்.







குச்சியைத் தவிர்த்து, கீறல் நுட்பத்தில் பயன்படுத்தப்படும் வேறு கருவிகளைக் குறிப்பிடவும்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.1
2.1.1

- படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

# சேர்ப்பு ஒட்டுப்படமும் கீறலும்

## கருவியும் பொருளும்


குச்சி



மெழுகு வண்ணம்


வண்ணத்தாள்


பனிக்கூழ் குச்சி



பசை


கத்தரிக்கோல்



சித்திரத்தாள்


கரிக்கோல்

கீறல் நுட்பமும் சேர்ப்பு ஒட்டுப்பட நுட்பமும் ஒருங்கிணைந்த நிலையில் வேறு எந்தப் பொருளைப் படைக்கலாம்?

1. சேர்ப்பு ஒட்டுப்படம்
2. கீறும் நுட்பம்




**ஆசிரியர் குறிப்பு**

2.1.1
3.1.1
4.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும்/ தொழில் முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

# பாரிஸ் கோபுரம்

## கருவியும் பொருளும்



வண்ணத்தாள்




மெழுகு வண்ணம்



குச்சி




பசை



கத்தரிக்கோல்

1



பல்வேறு வண்ணங்களைப் பூசுதல்

2



கறுப்பு வண்ணத்தால் மூடுதல்

3



கீறுதல் (தடித்த)

4



கீறுதல் (மெல்லிய)

## பாதுகாப்பு

இந்த நடவடிக்கையைப் பொறுமையாகவும் ஆசிரியர் துணையுடனும் மேற்கொள்ளவும். கூர்மையான பொருட்களைக் கவனமாகக் கையாளவும்.

### ஆசிரியர் குறிப்பு

2.1.1
3.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

5



கீறுதல் (சுருள்)

6



வண்ணத்தாளைக் கத்தரித்தல்

7



ஒட்டுதல்

8



தாளினை உருண்டையாக்குதல்

௯




ஒட்டுதல்



முழுமையான படைப்பு

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1
3.1.1
4.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும்/ தொழில் முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

# கலைப் படைப்பினை மதித்துப் போற்றுதல்



## நடவடிக்கை 1

மாணவர்கள் சரியான காட்சிக் கலைமொழியைப் பயன்படுத்திப் பாடல், நாடகம், கவிதை போன்ற நடையில் தங்களின் படைப்பைச் செய்வர்.

காட்சிக் கலைமொழி (உதாரணம்)

- வண்ணம்
- கோடு
- எதிர்மறை
- சுபிட்சம்

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1
3.1.1
4.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும்/ தொழில் முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

# அலகு 2 மலேசியாவை நேசிப்போம்

சுவரொட்டி என்பது காட்சி வழி தகவல் பரிமாற்றம் செய்யும் தொடர்பு ஊடகமாகும். சுவரொட்டியில் இடம்பெறும் தகவல்கள் எளிதாகவும் புரிந்துகொள்ளும் தன்மையிலும் இருந்தால் பார்வையாளர்களை எளிதில் சென்றடையும். சுவரொட்டியைப் பல்வேறு நுட்பங்களில் தயாரிக்கலாம். இன்றைய நவீன உலகத்தைத் தகவல் தொழில்நுட்பம் ஆக்கிரமித்திருப்பதால் பெரும்பாலான நிலைகளில் சுவரொட்டி தயாரிப்பதற்குக் கணினிகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர்.

## பல்வேறு தலைப்பிலான சுவரொட்டிகள்




நாட்டுப்பற்று




நன்னெறிப்பண்பு




விழிப்புணர்வு

## நடவடிக்கை 1

மாணவர்கள் வெளிநடவடிக்கையாகப் பள்ளி வளாகத்தில் தென்படும் சுவரொட்டிகளை அடையாளங்கண்டு அவற்றின் உருவாக்கம், தலைப்பு, இடம்பெற்றுள்ள கலை மொழி ஆகிய கூறுகளை வகுப்பில் விவாதிப்பர்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.1
2.1.2

- சுவரொட்டி படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** அறிவியல் தொழில் நுட்பம் **உ.சி.தி:** மதிப்பிடுதல் / பகுத்தாய்தல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்/ அறியும் ஆர்வம்

## சுவரொட்டியின் முக்கிய ஐந்து கூறுகள்

1. தலைப்பு
2. வண்ணம்
3. கற்பனையாற்றல்
4. வடிவமைப்பு
5. எழுத்துரு




## சுவரொட்டியின் உள்ளடக்கம் கீழ்க்காணும் ஐந்து நிலைகளில் இருக்க வேண்டும்.

- தகவலை நேரடியாகத் தெரிவித்தல்.
- முக்கியத் தகவலைப் படம் அல்லது எழுத்து மூலமாகச் சுருங்கக் கூறல்.
- தகவலைச் சரியாகவும் தெளிவாகவும் தெரிவித்தல்.
- எழுத்துரு சரியான அளவிலும் சுவரொட்டிக்கு ஏற்ற வடிவிலும் இருத்தல்.
- சுவரொட்டி பார்வையாளர்களைக் கவரும் தன்மையில் இருத்தல்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.1
2.1.2

- மொந்தாஜ் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுக.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்

## மொந்தாஜ் (ஒட்டுப்படம்)

ஒரே கருப்பொருள் அல்லது தலைப்பு தொடர்பான படங்களைப் பல்வேறு மூலங்களிலிருந்து கத்தரித்து ஒட்டுவதே மொந்தாஜ் முறையாகும்.





## ஒருங்கிணைந்த நிலையில் சுவரொட்டி தயார் செய்யும் சிந்தனை வரைபடம்

கருப்பொருள் தேர்வு செய்தல் → கணினி /இதழ் / நாளிதழ்வழி படங்கள் சேகரித்தல் → படங்களைக் கத்தரித்தல் → சுவரொட்டி வரைகலையைத் தயார் செய்தல் → படங்களைச் சுவரொட்டியோடு இணைத்தல் → ஒருங்கிணைந்த நிலையில் சுவரொட்டி

### ஆசிரியர் குறிப்பு

1.1.1
2.1.2

- மொந்தாஜ் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுக.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் மதிப்பிடுதல் **21 ஆம் நூ. ப:** தகவல் நிறைந்தவர் / அறியும் ஆர்வம்

# மொந்தாஜ் நுட்பத்தோடு ஒருங்கிணைந்த நிலையில் சுவரொட்டி



நாளிதழ்






கணினி



கையேடு




இதழ்

## நடவடிக்கை 2

1. ‘உள்நாட்டுப் பொருள்களை வாங்குவோம்’ என்ற சுவரொட்டியைக் கவனிக்கவும்.
2. தலைப்பு, வண்ணம், எழுத்துரு, வடிவமைப்பு, கற்பனையாற்றல் ஆகியவற்றைப் பற்றி நண்பர்களிடம் கலந்துரையாடவும்.
3. குழு வாரியாகக் கருத்துகளைச் சமர்ப்பிக்கவும்.

## நடவடிக்கை 3

விற்பனை, பாதுகாப்பு, பொது அறிவிப்பு, விழிப்புணர்வு, நிகழ்வு, தகவல், பாதுகாப்பு, விளம்பரம் ஆகிய நிலைகளில் சுவரொட்டி வகைகளை அறிந்து கணினியில் அவற்றைச் சேகரித்து வைக்கவும்.

## நடவடிக்கை 4

குழு முறையில் சுவரொட்டியை உருவாக்கவும்.

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1
3.1.1
4.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்/ தகவல் நிறைந்தவர்

# மலேசியாவை நேசிப்போம்

**கருவியும் பொருளும்**



இதழ்



கத்தரிக்கோல்




பசை



தூரிகை




திரவ வண்ணம்

1



படங்களைச் சேகரித்தல்

2



படங்களைக் கத்தரித்தல்

3



அடுக்கி ஒட்டுதல்

4




தலைப்பு எழுதுதல்

**ஆசிரியர் குறிப்பு**

2.1.1
3.1.1
4.1.1

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர் / குழுவாகச் செயல்படுதல்




முழுமை பெறுதல்

## நடவடிக்கை 5

'மலேசியாவை நேசிப்போம்' எனும் சுவரொட்டியை உற்று நோக்கிக் கலந்துரையாடுக.

**காட்சிக் கலைமொழி**

அ. வடிவம்
ஆ. சமநிலை
இ. இடைவெளி
ஈ. முதன்மைக் கூறு

**சுவரொட்டியின் கூறுகள்**

அ. வடிவமைப்பு
ஆ. எழுத்துரு
இ. உருவாக்கத்திற்கான நுட்பம்
ஈ. உருவாக்க முறை

**ஆசிரியர் குறிப்பு**

3.1.1
4.1.1
4.1.2

- பட உருவாக்கத்துறையில் ஒருங்கிணைந்த நிலையில் கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.
- சமூகம் மற்றும் வாழ்வியலில் படைத்த கலைப்படைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்/ குழுவாகச் செயல்படுதல்

# அலகு 3 வண்ணத்துளிகள்

படைப்பாற்றலில் கற்பனைத் திறனையும் கற்பனையாற்றலையும் வளர்க்கும் நுட்பங்களில் சொட்டுதல் கலை நுட்பமும் ஒன்று. மெழுகினை வரைதாளின் மேல் சொட்டுச் சொட்டாக ஒழுகச் செய்யும் நுட்பத்தின்வழி இந்தக் கலையை மேற்கொள்ளலாம். குறிப்பிட்ட இடம் என்றில்லாமல் நம் கற்பனைக்கேற்றவாறு மெழுகினைச் சொட்டச் செய்யலாம். அதன் பிறகு அதன் மேல், பிடித்த வண்ணத்தைப் பூச வேண்டும். இதை இரண்டு மூன்று நிலைகளில் செய்யலாம். இறுதியாக மெழுகினை அகற்றினால் கோலங்கள் வெளிப்படும்.



**ஆசிரியர் குறிப்பு**

1.1.2
2.1.5

- சொட்டுதல் கலைப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்

# சொட்டுதல் கலை

## குறிப்பு

- சித்திரத்தாளைச் சமமான இடத்தில் வைத்தல்
- முதலில் மெழுகினைச் சொட்டுதல்
- வண்ணம் பூசுதல்
- காய்ந்தபின் மீண்டும் சொட்டுதல்
- வண்ணம் மிதமான திரவ நிலையில் இருக்க வேண்டும்
- மிதமான வெப்பத்தில் உலர்த்துதல்
- பொறுமையுடனும் கவனத்துடனும் மெழுகினை அகற்றுதல்

## பாதுகாப்பு

மெழுகுவர்த்தியைக் கவனமாகக் கையாளவும். சொட்டுதல் நடவடிக்கையைத் திறந்த வெளியில் அல்லது வகுப்பறைக்கு வெளியில் நடத்துதல் நன்று.



## நினைவில் கொள்க

நமது கைவண்ணம் பழுதாகாமல் இருக்க மெழுகினை வெளியேற்றும்போது மிக கவனமாகச் செயல்பட வேண்டும். மெழுகினை அகற்றிய பிறகு அதன் எச்சங்கள் படைப்பில் ஒட்டாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.



**ஆசிரியர் குறிப்பு**

1.1.2
2.1.5

- சொட்டுதல் கலைப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** தகவல் நிறைந்தவர் / சிந்தனையாளர்

# பல்வகை நுட்பங்களில் சொட்டுதல் கலை



அருகில் சொட்டுதல்



உயரத்தில் சொட்டுதல்



மெழுகு அகற்றா நிலை



ஊதுதல் நிலை



தெளித்தல் நிலை

**ஆசிரியர் குறிப்பு**

1.1.2
2.1.5
3.1.2

- சொட்டுதல் கலைப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- கோலங்களை உருவமைத்தலும் உருவாக்குதலும் துறையில் திட்டமிடப்பட்ட, திட்டமிடப்படாத கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்

# சொட்டுதல் படைப்பின் கலைமொழி



| கண்டுணரும் மேல்தள வடிவமைப்பு | எதிர்மறை வண்ணம் | சுபிட்சமான சூழல் | பல்வகை சொட்டுக் கலை |
|---|---|---|---|

## சொட்டுதல் கலைக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள்




சித்திரத்தாள்



மெழுகுவர்த்தி




திரவ வண்ணம்



குச்சி



தீப்பெட்டி

## பாதுகாப்பு

இந்த நடவடிக்கையைப் பொறுமையாகவும் ஆசிரியர் துணையுடனும் மேற்கொள்ளவும். கூர்மையான பொருட்களைக் கவனமாகக் கையாளவும்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.2
2.1.5

- சொட்டுதல் கலைப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்

# சொட்டுதல் நடவடிக்கை



1 மெழுகினைச் சொட்டுதல்



2 மஞ்சள் வண்ணம் பூசுதல்



3 மெழுகினைச் சொட்டுதல்



4 சிவப்பு வண்ணம் பூசுதல்

5



மெழுகினைச் சொட்டுதல்

6



கறுப்பு வண்ணம் பூசுதல்

7



மெழுகினைக் குச்சியால் நீக்குதல்



முழுமையான படைப்பு

## பாதுகாப்பு

இந்த நடவடிக்கையைப் பொறுமையாகவும் ஆசிரியர் துணையுடனும் மேற்கொள்ளவும். கூர்மையான பொருட்களைக் கவனமாகக் கையாளவும்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.2
2.1.5
3.1.2

- சொட்டுதல் கலைப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- கோலங்களை உருவமைத்தலும் உருவாக்குதலும் துறையில் திட்டமிடப்பட்ட, திட்டமிடப்படாத கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் | **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் | **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம் / குழுவாகச் செயல்படுதல்

# குறுவட்டு அடுக்கி

## கருவியும் பொருளும்




காகித அட்டை



கத்தரிக்கோல்




பசை



சொட்டுதல் கைவண்ணம்



எழுதுகோல்

1



கைப்பாகம் வரைதல்

2



கத்தரித்தல்

3



சொட்டுதல் கைவண்ணத்தை அச்சு வைத்து வரைதல்

4



கத்தரித்தல்

5




தடித்த அட்டையோடு ஒட்டுதல்

6



பிடித் தளம் செய்தல்

**ஆசிரியர் குறிப்பு**

2.1.5

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.



**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்

7



ஒட்டுதல்

8



குறுவட்டுப் பிடித் தளம் செய்தல்



முழுமையான படைப்பு

## குறிப்பு

ஒருங்கிணைந்த நடவடிக்கைவழி மாணவர்கள் மிருகங்கள், பறவைகள், மீன்கள் ஆகியவற்றின் உருவங்களை வடிவங்களாகக் கற்பனைக்கேற்றவாறு படைக்கலாம்.

**ஆசிரியர் குறிப்பு**

3.1.2
4.1.1
4.1.2

- கோலங்களை உருவமைத்தலும் உருவாக்குதலும் துறையில் திட்டமிடப்பட்ட, திட்டமிடப்படாத கலைப் படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்
- சமூகம், வாழ்வியலில் படைத்த கலைப்படைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம் / குழுவாகச் செயல்படுதல்

# அலகு 4 காகித மிதிவண்டி

## வடிவகம் (STABAIL)



முப்பரிமாண நிலையில் உறுதியான அடித்தளத்தில் அமையப் பெற்றிருக்கும் இந்த வடிவத்தில் அதற்குரிய பொருள் பதிந்திருக்கும். இதன் அடித்தளம் நிலையாகவும் மேல் பகுதி அசைந்தும் அசையாமலும் அமைந்திருக்கும். பல்வேறு பொருள்களைக் கொண்டு இதனை உருவாக்கலாம். அஃது ஓரிடத்தில் நிலையாய் நிறுத்தப்பட்டிருக்கும். மாணவர்களின் கற்பனைத் திறனைக் கொண்டு தேர்வு செய்யப்படும் தலைப்பிற்கேற்ப இதனைப் படைக்கலாம்.




**ஆசிரியர் குறிப்பு**

1.1.3
2.1.7

- வடிவகப் படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** பகுத்தாய்தல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம் / தகவல் நிறைந்தவர்

# கருவியும் பொருளும்

| பொருள்/கருவி | | உத்தி/நுணுக்கம் | வெளிப்பாடு |
|---|---|---|---|
| குறுவட்டு |  | சக்கரப் பாகத்திற்காகக் குறுவட்டை இணைத்தல். |  |
| காகித உறிஞ்சி |  | கட்டுதல் முறையில் உருவம், உடல் அமரும் இடம் உருவாக்குதல் |  |
| திருகுமறை |  | மிதிப்பகம் இணைத்தல் |  |
| நெகிழி மூடி |  | மிதிப்பகம் உருவாக்கத்தை இணைத்தல் |  |
| காகித உருளை |  | அடித்தளம் அமைத்தல் |  |
| பசை |   | மிதிவண்டி பாகங்களை இணைத்தல் |  |
| சாயம் |   | மிதிப்பகம், அடித்தளம் வண்ணமிடல் |  |
| கத்தரிக்கோல் |  | கத்தரித்தல் |  |

**ஆசிரியர் குறிப்பு**

2.1.7
3.1.4

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- உருவமைத்தலும் கட்டுதலும் துறையில் கலைப் படைப்பு அல்லது பொருள்களை உருவாக்க மாணவர்களைத் தூண்டுதல்

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்/ குழுவாகச் செயல்படுதல்

## செய்முறை

1



2



வட்ட வடிவிலான காகித உருளையுடன் குறுவட்டினை இணைத்தல்

3



காகித உறிஞ்சியில் மிதிவண்டியின் பாகங்களைச் செய்தல்

4



மிதிவண்டியின் பாகங்களைக் குறுவட்டுடன் இணைத்தல்

5



திருகுமறையில் மிதிப் பாகம் செய்தல்

6



அமரும் இடம் செய்தல்

7



ஒட்டுதல்

8



கைப்பிடி செய்தல்



வடிவம் நிலையாக நிற்க வடிவம் செய்தல்



சாயம் பூசுதல்



முழுமைப் படைப்பு

## பாதுகாப்பு

இந்த நடவடிக்கையைப் பொறுமையாகவும் ஆசிரியர் துணையுடனும் மேற்கொள்ளவும். கூர்மையான பொருட்களைக் கவனமாகக் கையாளவும்.

**ஆசிரியர் குறிப்பு**

3.1.4
4.1.1
4.1.2

- உருவமைத்தலும் கட்டுதலும் துறையில் கலைப் படைப்பு அல்லது பொருள்களை உருவாக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.
- சமூகம், வாழ்வியலில் படைத்த கலைப்படைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் / தொழில் முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் / மதிப்பிடுதல் **21 ஆம் நூ. ப:** சிந்தனையாளர்

# அலகு 5 பொங்கல் பானை

## பொங்கலோ பொங்கல்

புதுப்பானையில் மஞ்சள் கட்டி
பொலிவுடனே அலங்கரித்து
பாலும் சர்க்கரை பாகுமிட்டு
பாங்குடனே பொங்கல் வைப்போம்

பொங்கல் வைப்போம் பொங்கல் வைப்போம்
பாரில் பசுமைபொங்க பொங்கல் வைப்போம்!

அன்போடு அறிவும் சேர்ந்து
பண்போடு பாசம் கலந்து
நாடும் வீடும் நலம்பெறவே
நாம் இணைந்து பொங்கல் வைப்போம்!

பொங்கல் வைப்போம் பொங்கல் வைப்போம்
பாரில் பசுமைபொங்க பொங்கல் வைப்போம்!





**ஆசிரியர் குறிப்பு**

1.1.4
4.1.2

- மண்பாண்ட படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- சமூகம், வாழ்வியலில் படைத்த கலைப்படைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு / சுற்றுச்சூழல் நிலைத் தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** பகுத்தாய்தல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்/ தகவல் நிறைந்தவர்

மண்பாண்டம் என்பது களி மண்ணினால் செய்யப்படும் பாரம்பரிய கைவினைப் பொருளாகும். கடாரத்தில் உள்ள பூஜாங் பள்ளத்தாக்கு, கிளந்தானில் உள்ள 'குவா ச்சா, பேராக் நதிக்கரை போன்ற இடங்களில் சுட்டாங்கல் (செராமிக்) மண்பாண்டம் போன்ற பொருள்கள் கண்டெடுக்கப்பட்டபின் இந்த மண்பாண்டக் கலை மலேசியாவில் துரிதமாக வளர ஆரம்பித்தது. பலவிதமான மண்பாண்டங்கள் இப்போது நமது நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலானவை பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

## மண்பாண்டங்களில் சில உதாரணங்களைக் காண்போம்.



## நடவடிக்கை 1

மேற்கண்ட மண்பாண்டங்களில் இடம்பெற்றுள்ள உருவம், வடிவம், சமநிலை, பல்வகை ஆகிய முதன்மைக் கூறுகளைக் குழுவாகப் பட்டியலிட்டு வகுப்பில் கலந்துரையாடவும்.

## நடவடிக்கை 2

பொங்கல் பானை அலங்கரித்தலின் போது எத்தகைய சுபிட்சங்களை அதில் வரையலாம் என்பதை நண்பர்களிடம் கலந்துரையாடிப் பட்டியலிடவும்.

**ஆசிரியர் குறிப்பு**

1.1.4
4.1.2

- மண்பாண்ட படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- சமூகம், வாழ்வியலில் படைத்த கலைப்படைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்

# லாபு சாயோங்

பேராக் மாநிலத்தில் கோலகங்சார் பட்டணம் லாபு சாயோங் மண்பாண்டத்திற்குப் பிரசித்திப்பெற்ற இடமாகும். இங்குப் பலவிதமான மண்பாண்டங்கள் வர்த்தக ரீதியாகத் தயாரிக்கப்படுகின்றன. வாருங்கள், லாபு சாயொங் பாகங்களை அறிவோம்.




**ஆசிரியர் குறிப்பு**

1.1.4
2.1.9

- மண்பாண்ட படைப்புகளில் காட்சிக் கலைமொழிகளை அடையாளங்கண்டு அவற்றைப் படைப்போடு தொடர்புபடுத்திக் கலந்துரையாடுதல்.
- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.

**வி.வ.கூ:** மொழி / தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்/ தகவல் நிறைந்தவர்

# மண் பாண்டங்களில் வரையப்படும் சுபிட்சங்கள்






பூச்சோக் ரெபுங்


பூங்கா ச்சாக்கார்


இலவங்கப் பூ


பூங்கா தஞ்சோங்


நெற்கதிர்


பூங்கா கெடுடுக்


‘S’ வடிவம்


பூங்கா லவாங்


பூங்கா பெச்சா





## நடவடிக்கை 3

மேற்கண்ட சுபிட்சங்கள் தொடர்பான கூடுதல் தகவல்களை இணையத் தேடல்வழி கண்டறிந்து அவற்றின் பெயர்களைப் பட்டியலிடவும். ஆசிரியரிடம் கலந்துரையாடி சரிபார்க்கவும்.

**ஆசிரியர் குறிப்பு**

2.1.9

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்.

**வி.வ.கூ:** தொழில் முனைப்பு **உ.சி.தி:** பகுத்தாய்தல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம் / தகவல்

## மாவு பிசைவோம்

### தேவையானவை

- 4 குவளை மாவு
- 1 குவளை உப்பு
- 1 குவளை நீர்
- நெகிழி கரண்டி
- நீர்ம வழலை சில சொட்டுகள்
- திரவ வண்ணம்
- நெகிழிப் பை
- தேங்காய் எண்ணெய் ஒரு தேக்கரண்டி

இன்றைய சூழலில் களிமண் கிடைப்பது அரிது. எனவே, களிமண்ணுக்குப் பதிலாகக் கோதுமை மாவைப் பயன்படுத்தலாம். அளவுக் குவளை ஒன்றைப் பயன்படுத்தி மாவு, உப்பு, நீரை அளக்கவும்.

### குறிப்பு

இந்நடவடிக்கையைப் பாதுகாப்புடன் மேற்கொள்ளவும்.

1 
நீர் ஊற்றவும்

2 

வண்ணம் இடவும்

3 
கலக்கவும்

4 
மாவைச் சேர்க்கவும்

5 
உப்பைச் சேர்க்கவும்

6 
பிசையவும்

7 
எண்ணெய் இடவும்

8 
நீர்ம வழலை இடவும்

9 
நன்றாய்ப் பிசையவும்

10 
நெகிழிப் பையில் மடிக்கவும்


பாதுகாப்பாக வைக்கவும்

**ஆசிரியர் குறிப்பு**

2.1.9
3.1.5

- காட்சிக் கலைமொழி அறிவின்வழி உபகரணங்கள், நுட்பமுறை, அமலாக்க முறையை அறிதல்.
- பாரம்பரிய கைவினைத் திறன் அறிதல் துறையில் எளிய படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.

**வி.வ.கூ:** ஆக்கமும் புத்தாக்கமும் / தொழில் முனைப்பு **உ.சி.தி:** உருவாக்குதல் **21 ஆம் நூ. ப:** குழுவாகச் செயல்படுதல்

## பொங்கல் பானை செய்வோம்

1



மாவினை வட்ட வடிவமாக்குதல்

2



பானை வடிவத்தினை உருவாக்குதல்

3



சுபிட்சம் வரைதல்

4



மாவில் வண்ணம் கலந்து அடுப்பின்
தளம் அமைத்தல்

5



வண்ணம் கலந்து விறகு உருவாக்குதல்

6



அடுப்பின் தளம் அமைத்தல்



முழுமைப் படைப்பு

**ஆசிரியர் குறிப்பு**

3.1.5
4.1.1
4.1.2

- பாரம்பரிய கைவினைத் திறன் அறிதல் துறையில் எளிய படைப்பினைப் படைக்க மாணவர்களைத் தூண்டுதல்.
- உருவாக்கிய படைப்பினைக் காட்சிக்கு வைத்து மதித்துப் போற்றும்படி தூண்டுதல்.
- சமூகம், வாழ்வியலில் படைத்த கலைப்படைப்பினைத் தொடர்புபடுத்துதல்.

**வி.வ.கூ:** நன்னெறிப் பண்பு / ஆக்கமும் புத்தாக்கமும் **உ.சி.தி:** உருவாக்குதல் / பகுத்தாய்தல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** அறியும் ஆர்வம்/ குழுவாகச் செயல்படுதல்

# முதலாம் பருவ இடுபணி

முதல் பருவத்தில் உருவாக்கிய படைப்புகளை வகுப்பு, பள்ளி வாரியாக சேகரித்துத் தேர்வு செய்யப்பட்ட கைவண்ணங்களைக் கொண்டு சிறிய அளவில் கண்காட்சி நடத்துதல். இதனை வகுப்பறை, சிறப்பு அறை அல்லது காட்சிக் கலைக் கூடத்திலும் நடத்தலாம். மாணவர்கள் இவ்விடுபணியினைக் கண்காட்சிக்கு முன், கண்காட்சியின் போது, கண்காட்சிக்குப் பின் என மூன்று நிலைகளில் திட்டமிட வேண்டும்.

## கண்காட்சிக்கு முன்

**நடவடிக்கைகளுக்கு முன்**

செயலவையினரை நியமித்தல்





கண்காட்சியின் கருப்பொருளை நிர்ணயித்தல்

கண்காட்சியின் இடத்தை நிர்ணயித்தல்





படைப்பைத் திரட்டி துறை சார்ந்து பிரித்தல்

படைப்பின் விவரக் குறிப்பை எழுதுதல்






படைப்பை அடுக்குதல்

கண்காட்சியை விளம்பரப்படுத்துதல்




கண்காட்சியினை விளம்பரப்படுத்த அதன் கையேடுகளைத் தயாரிக்க எத்தகைய முறையைக் கையாள வேண்டும் என்பதைக் கூறுக.

**ஆசிரியர் குறிப்பு**

5.1.1
5.1.2

- குழு முறையில் காட்சிக் கலைக் கல்வி கண்காட்சிக்குத் திட்டமிடல்.
- திட்டமிட்டபடி கண்காட்சியை முறையாக நடத்திட மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

**வி.வ.கூ:** சுற்றுச் சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல் **உ.சி.தி:** உருவாக்குதல் / பயன்படுத்துதல் **21 ஆம் நூ. ப:** குழுவாகச் செயல்படுதல் / தொடர்புகொள்ளும் திறன்

# கண்காட்சியின் போது

- குறிப்பிட்ட நேரத்தில் கண்காட்சி அறைக்கு, மாணவர்கள் அனைவரும் வந்தடைதல்.
- அனைத்து ஏற்பாடுகளும் சரியாகவும் பாதுகாப்புடனும் இருப்பதை உறுதிப்படுத்துதல்.
- வருகையாளர்களை இன்முகத்துடன் வரவேற்றல்.




- கண்காட்சியின்போது காட்சிக்கலை மொழியைப் பயன்படுத்திப் படைப்பை விளக்குதல் - பேசுதல்
- செயல்முறையையும் நுட்பத்தையும் விளக்குதல்
- கலையின் முக்கியத்துவத்தை விளக்கி அன்றாட வாழ்வியலோடு கலையைத் தொடர்புபடுத்துதல்.
- படைப்பாளர்களுடன் தொடர்புபடுத்துதல்.

**ஆசிரியர் குறிப்பு**

5.1.3
5.1.4
5.1.5

- கண்காட்சி நடத்துதல்.
- கண்காட்சியின்போது, தனது படைப்பினைப் பற்றிக் கூறுவதோடு நண்பர்களின் படைப்பினைப் பற்றியும் கூறப் பயிற்சி அளித்தல்.
- கண்காட்சியின்போது படைப்புகளையும் கருவிகளையும் முறையாக நிர்வகிப்பதோடு, அவற்றின் பாதுகாப்பினையும் உறுதிசெய்ய வழிகாட்டுதல்.

